# உடன்பிறப்பே... 7

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த சி.வி.எம்.அண்ணாமலை அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# சி.வி.எம்.அண்ணாமலை: அண்ணாவின் நம்பிக்கை‘மலை’



ஓவியம் : ரவிபேலட்

சமூகத்தில் சாதிய மனநிலையும் ஏற்றத்தாழ்வுகளும் ஓங்கி இருந்த காலகட்டம். சுயமரியாதைக் கருத்துகளையும் சமூகநீதிச் சிந்தனைகளையும் தந்தை பெரியார் அழுத்தம் திருத்தமாகப் பரப்புரை செய்யத் தொடங்கி இருந்தார். அந்தக் கருத்துகளை உள்வாங்கிய ஒரு 14 வயது காஞ்சிபுரம் சிறுவன், **‘அப்பாகுட்டி’** எனும் ஆதிதிராவிடர் தோழர் ஒருவரின் இல்லம் சென்று, அவருடன் ஒன்றாக அமர்ந்து கூழ் குடிக்கிறார். அதற்கான தண்டனையாக அந்தச் சிறுவனை நடுவீதியில் கட்டிவைத்து, தீக்குச்சியால் நாக்கிலும் மூக்கிலும் சூடு வைக்கிறார்கள் ஆதிக்கச் சாதிப் பெரியவர்கள்.

அந்தத் தீக்குச்சிகளின் வெப்பம் அந்தச் சிறுவனின் மனதை மாற்றிவிடவில்லை. தன் வாழ்நாள் முழுவதும் கொண்ட கொள்கையிலிருந்து சற்றும் விலகாமல், கொள்கைச் சிங்கமாய்ப் பயணித்தார். அதற்குக் காரணம் அவன் மனதில் எரிந்துகொண்டிருந்த **‘சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைத் ‘தீ’’**. அந்தச் சிறுவன்தான் பின்னாட்களில் **‘சி.வி.எம்.’** என அன்போடு அழைக்கப்பட்ட **‘உடன்பிறப்பு’ சி.வி.எம்.அண்ணாமலை.**

## அண்ணாவுக்காக ‘குரல்’ கொடுத்தவர்!

கழகம் தந்த அண்ணா பிறந்த காஞ்சியில், கழகத்தின் கொள்கை காக்கும் தூணாகப் பிறந்தவர் சி.வி.எம்.அண்ணாமலை. 1917-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் தேதி முனிசாமி-அம்மாக்கண்ணு அகியோருக்கு 4-வது மகனாகப் பிறந்தார். மிக ஏழ்மையான குடும்பம். ஆனாலும், அது அவரின் மக்கள் நலன் மீதான பணியில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்திவிடவில்லை. காஞ்சிபுரம், தாமல்வார் தெருவில் செயல்பட்டு வந்த சுயமரியாதை இயக்கத்தின் அலுவலகமும், அங்கு வரும் ‘குடிஅரசு’ போன்ற பகுத்தறிவு நாளிதழ்களும் அவருக்கு இயக்கக் கொள்கைகளை ஊட்டின.

1936 - ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தம் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. அப்போது நடந்த பொதுக்கூட்டத்தில் **தொழிற்சங்கத் தலைவர் பாசுதேவ்** அவர்களின் உரையை, தமிழாக்கம் செய்கிறார் அறிஞர் அண்ணா.

**அவரின் தமிழாக்க உரையால் ஈர்க்கப்பட்ட சி.வி.எம்., ‘அண்ணாவைத் தனியாகப் பேச அனுமதிக்க வேண்டும்’ எனக் குரல் கொடுக்க, கூடி இருந்த கூட்டமும் அதையே சொல்கிறது. அதன் காரணமாக அண்ணாவும் ஒரு மணி நேரம் பேசி முடிக்க, சொக்கி நின்றது காஞ்சிபுரம். அன்று தொடங்கி, அண்ணாவின் லட்சியத் தம்பிகளில் ஒருவரானார் சி.வி.எம்.**

## மொழி காக்க சிறை!

வடக்கின் இந்தித் திணிப்புக்கு எதிராக, 1938-ஆம் ஆண்டில் போர்க்குணம் கொண்டு எழுகிறது அன்றைய சென்னை மாகாணம். தமிழ் உணர்வோடு எங்கும் போராட்டங்கள் நடை பெற்றன. அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டு, பெரியார் அவர்கள் இருந்த பெல்லாரி சிறையில் ஆறு மாத காலம், மொழி காக்க தண்டனை பெற்றார் சி.வி.எம்.

### ‘செந்தமிழ்ச் செல்வர்’

சி.வி.எம். அவர்களின் தனித்தமிழ்ப் பணிகளை கௌரவித்திடும் வகையில், 1971-ஆம் ஆண்டு காஞ்சிபுரம் கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் அரங்கில், நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர்களும் சான்றோர்களும் கூடி சி.வி.எம். அவர்களுக்கு **‘செந்தமிழ்ச் செல்வர்’** எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கினர்.

பேரறிஞர் அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய போது, அண்ணாவின் தலைமையை ஏற்று கழகத்தில் இணைந்து செயல்படத் தொடங்கினார். 1949-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கழகத்தின் முதல் செயற்குழுவில் இடம்பெற்றிருந்த 16 நபர்களில் ஒருவராக அண்ணாமலை பெயரும் இடம் பெற்றிருந்தது. அதேபோல், இன்று தமிழ் நிலமெங்கும் பரந்து விரிந்துள்ள கழகத்தை மக்களிடையே கொண்டு சேர்க்க, அன்று அண்ணா அறிவித்த பிரச்சாரக் குழுவிலும் கலைஞருடன் இடம்பெற்றிருந்தார் அண்ணாமலை.

## நிதி திரட்ட ‘தூக்குமேடை’

மேடைப்பேச்சைப் போலவே நாடகங்களையும் கொள்கைகளைக் கொண்டு செல்வதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தியது திராவிட இயக்கம். அந்தப் பணியிலும் முன்னோடியாகச் செயல்பட்டார் பேரறிஞர் அண்ணா. அவர் எழுதிய ‘சந்திரோதயம்’, ‘சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்’ எனப் பல நாடகங்களில் கலைஞர், சிவாஜி கணேசன் ஆகியோருடன் அண்ணாமலையும் இணைந்து நடித்தார்.

1952-ஆம் ஆண்டு தஞ்சையில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கழகத்தின் சார்பில் நிதி திரட்டித் தர முடிவெடுக்கப் பட்டது. நிதி திரட்டும் பணிக்காக, தன்னுடைய ‘தூக்குமேடை’ நாடகத்தைப் பல ஊர்களில் நடத்தினார் கலைஞர். அதிலும் ‘பரமார்த்திகர்’ எனும் வேடத்தில் நடித்தார் அண்ணாமலை.

கழகத்தின் முதல் மாநில மாநாடு 1952-ஆம் ஆண்டு நடைபெறும் என அறிவித்தார் அண்ணா. மாநாட்டுக்கான செலவுகளுக்கு நிதி திரட்டும் பணி கலைஞரிடம் ஒப்படைக்கப்பட்டது. “உங்கள் பகுதிக்கு நான் வந்து பேசவேண்டும் என்றால், சென்னையில் நடைபெற உள்ள மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கவேண்டும்” என அறிவித்தார் கலைஞர். உடனே கலைஞரை அழைத்து, செங்கை மாவட்டச் செயலாளராக மாவட்டம் முழுவதும் கொடியேற்றும் நிகழ்ச்சி, பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை விடிய விடிய நடத்தி ஆயிரம், இரண்டாயிரம் என நிதி திரட்டி வழங்கினார் சி.வி.எம்.

## அண்ணா தொகுதியில் அண்ணாமலை!

கழகம் முதன்முதலில் போட்டியிட்ட 1957-ஆம் ஆண்டு தேர்தலிலும், 1962-ஆம் ஆண்டு தேர்தலிலும் திருப்பெரும்புதூர் தொகுதியில் பலம் வாய்ந்த பக்தவச்சலத்தை எதிர்த்து, சி.வி.எம் அவர்களை வேட்பாளராக நிறுத்தினார் அண்ணா. தோல்வியைச் சந்தித்த போதும் கவலையில்லாமல் கழகப் பணியைத் தொடர்ந்தார். அதன் பிறகு 1967-ஆம் ஆண்டு கடம்பத்தூர் தொகுதியிலிருந்து வென்று முதல்முறையாக தமிழ்நாடு சட்டமன்றம் சென்றார்.

அண்ணா மறைவுக்குப் பிறகு கழகம் சந்தித்த முதல் தேர்தலில், அண்ணா முதல்முறையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை அண்ணாமலைக்கு வழங்கினார் கலைஞர். அதுமட்டுமல்ல, தேர்தல் வெற்றிக்குப் பிறகு தனது அமைச்சரவையில் மக்கள் பணியாற்ற அண்ணாமலைக்கு சமூக நலத்துறையை ஒதுக்கினார் கலைஞர்.

## கனிவான பேச்சே ஆயுதம்!

செங்கல்பட்டு மாவட்டம், அல்லது அதைச் சார்ந்த தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களைச் சார்ந்த கழக விஷயங்களாக இருந்தால், “அண்ணாமலையிடம் அதைப் பற்றிக் கலந்து கொள்ளுங்கள்” என அண்ணா சொல்லும் அளவுக்கு நம்பிக்கை பெற்றவராகத் திகழ்ந்தார் சி.வி.எம். அதேபோல், அந்தப் பகுதிகளில் கழகத்தினரிடையே ஏற்படும் முரண்பாடுகளைக் களைந்து தீர்வு காண, அண்ணாமலை அவர்களின் கனிவு நிறைந்த பேச்சுதான் அண்ணா பயன்படுத்திய ஆயுதம்.




கழகம்-அண்ணா-கலைஞர்-காஞ்சி என வாழ்ந்த சி.வி.எம் அவர்கள் 1997 ஏப்ரல் 20-ஆம் தேதி மறைவுற்றார். அதையொட்டி, **“தி.மு.க என்ற மூன்று எழுத்துக்களில் நம்மவர் கொண்டுள்ள பாசத்தையும் நேசத்தையும் போலவே- சி.வி.எம். என்ற அந்த மூன்று எழுத்துகளில் நம்மவர் அனைவருக்கும் பாசம் உண்டு.** அவரது அஞ்சாநெஞ்சத்தையும், அயரா உழைப்பையும், தொண்டு செய்யும் தூய உள்ளத்தையும், இதயத்தில் பதிய வைத்துக் கொண்டு, அந்த இனியவர் விட்டுச் சென்றுள்ள பணிகளைத் தொடருவோம்” என இரங்கல் எழுதினார் கலைஞர்.

இயக்கமே வாழ்வென வாழ்ந்த உடன்பிறப்பு சி.வி.எம்.அண்ணாமலை அவர்களின் தியாகங்களையும் பணிகளையும் பாடங்களாக்கி, கழக வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வோம்.

**(துடிக்கும்...)**

## கலைஞரின் தீர்க்கதரிசனம்!




ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கலைஞர் கொண்டுவந்த பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தின் பலன் என்ன என்பதை, சமீபத்திய புள்ளிவிவரம் தெளிவாக விளக்கியுள்ளது. இந்திய அளவில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு சராசரியாக 33 பேர் பிச்சைக்காரர்களாக இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

தேசிய சராசரியை விடவும் மிக அதிகமாக ஒடிசா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பிச்சை எடுப்பவர்களின் எண்ணிக்கை உள்ளது. மேற்குவங்க மாநிலத்தில் ஒரு லட்சம் பேரில், 89 பேர் பிச்சையெடுக்கும் நிலையில் உள்ளனர். இந்தப் பட்டியலில் தமிழ்நாட்டின் இடம்தான் இந்தியாவின் பெருமிதமாக உள்ளது. மிகப்பெரிய மாநிலமான தமிழ்நாட்டில் ஒரு லட்சம் பேரில் 9 பேர் மட்டுமே அந்த நிலைமையில் உள்ளனர். வறுமை ஒழிப்பும், சமூகநீதியும் என்ன என்பதைப் புரிந்துகொள்ள இந்தப் புள்ளிவிவரங்களே போதும்.

## :ப்ளாஷ்பேக்



### ‘மிசா’ குடும்பங்கள்!



கண்ணையன்

அசோக் லேலேண்ட் தி.மு.க. பேரவை சார்பாக, 1977-ஆம் ஆண்டு ஜனவரி 3-ஆம் தேதி, மிசா வழக்கு நிதி அளிக்க, தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்திக்கச் சென்றோம். பேரவை சார்பாக 1,000 ரூபாயும், தனிப்பட்ட முறையில் 5 ரூபாய் நிதியும் கொடுத்து புகைப்படமும் எடுத்துக் கொண்டோம். “கைதான கட்சிக்காரங்க குடும்பத்தையும் நம்மதான்யா பாத்துக்கணும்” என்று அவர் சொல்லியபோது, மிசா கைதிகள் மீது தலைவர் கொண்டிருந்த தனி அக்கறை வெளிப்பட்டது.

**-எஸ்.கண்ணையன், வட்ட அவைத் தலைவர், திருவொற்றியூர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ‘தலைவர்’ கலைஞர்!

**1969-ஆம் ஆண்டு, கழகத்தில் ஏற்பட்ட ஒரு மாற்றம்தான் தமிழ்நாட்டின் அரசியலைப் புரட்டிப் போட்டது. அந்த மாற்றம் கட்சியை மேலும் வலுவாக்கும் வகையில் அமைந்தது. கழகப் பொதுச் செயலாளராக இருந்த அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பின்னர் அடுத்த பொதுச் செயலாளர் யார் என்கிற கேள்வி எழுந்தது. ஆட்சித் தலைமையும், கட்சித் தலைமையும் ஒருவரிடமே இருக்க வேண்டும் எனப் பெரும்பான்மை உறுப்பினர்கள் கருதினர். அதன் அடிப்படையில், கழக விதிகளில் சில திருத்தங்கள் செய்து தலைவர் பதவி உருவாக்கப்பட்டு கலைஞர் பொறுப்பேற்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 130




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131